## November 10, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மத்திய அரசின் தூய்மை இயக்கத்தின் ஒருபகுதியாக, கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசு அலுவலகங்களில் சேர்ந்திருந்த பழைய பொருள்கள், மின்னணு சாதனங்கள் போன்ற கழிவுகளை அகற்றியதன்மூலம் அரசுக்கு ரூ.4088.53 கோடி வருவாய் கிடைத்துள்ளது என்று மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
   - i. நிகழாண்டு மட்டும் இதன் மூலம் ரூ.788.53 கோடி கிடைத்தது என்றும் இது சந்திரயான்-3 திட்டச் செலவுக்கானதை விட அதிகமாகும் என்றும் அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறினார்.
   - ii. அவர் மேலும் கூறியதாவது: கடந்த 2021-ஆம் ஆண்டு முதல் 5 முறை இந்தச் சிறப்புத் தூய்மை இயக்கம் (ஸ்வச்சதா) நடத்தப்பட்டு, இதுவரை ரூ.4,088,53 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
   - iii. கடந்த ஆண்டு வரை ரூ.3,300 கோடி வருவாய் கிடைத்திருந்தது. இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 2 முதல் 31-ஆம் தேதி வரை நடத்தப்பட்ட தூய்மை இயக்கத்தின் முடிவில் கூடுதலாக ரூ.788.53 கோடி கிடைத்தது.
   - iv. நாடு முழுவதும் மத்திய அரசு அலுவலகங்களில் சுமார் 231.75 லட்சம் சதுர அடி இடம், பழைய கோப்புகள், உடைந்த பொருள்களால் மற்றும் பிற கழிவுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த இடங்களில் கழிவுகள் அகற்றப்பட்டதால், வேறு பயனுள்ள பயன்பாட்டிற்காகக் கிடைத்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளாக மின்னணு கழிவுகளை அகற்றுவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.
   - v. அலுவலகக்கழிவுகளை விற்பதன் மூலம் கிடைத்துள்ள இந்த ரூ.4088.53 கோடி வருவாய், ஒரு பெரிய விண்வெளித் திட்டத்தின் அல்லது பல 'சந்திரயான்' திட்டங்களின் செலவை ஈடுகட்டப் போதுமானது. கழிவுகள் அகற்றப்பட்டு காலியாகியுள்ள இடத்தில் ஒரு பெரியவர்த்தக வளாகத்தை அமைக்கலாம் என்று குறிப்பிட்டார்.
   - vi. இந்த ஆண்டு தூய்மை இயக்கம் நடைபெற்றபோது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் 'கழிவிலிருந்து செல்வம்' எனும் திட்டத்தையும் செயல்படுத்தியது. இதில், மருத்துவமனைக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், பயன்படுத்திய சமையல் எண்ணெயை மறுசுழற்சி செய்தல், மற்றும் சாலைகள் அமைக்க இரும்புக் கசடுகளைப் பயன்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
2. அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகேயுள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டுப் பறவைகளின் வருகை அதிரித்துள்ளது. இதனால், சுற்றுலாப் பயணிகளிடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
   - i. அரியலூர் நகரத்தில் இருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ள திருமானூரை அடுத்துள்ளது கரைவெட்டி பறவைகள் சரணாலயம்.
   - ii. 454 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இந்தச் சரணாலயத்துக்கு மத்திய ஆசியா, திபெத் லடாக், வடக்கு ரஷியா, சைபீரியா போன்ற நாடுகளில் இருந்து பறவைகள் வந்து செல்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் மே மாதம் வரையில் தங்கிச் செல்கின்றன. இதேபோல் இந்த ஆண்டும் வெளிநாட்டு பறவைகளின் வருகை அதிகரித்துள்ளது.
   - iii. பகல் நேரங்களில் அருகிலுள்ள அறுவடை செய்யப்பட்ட வயல்களில் சிதறிக் கிடக்கும் நெல்மணிகளைத் தின்பதற்காகவும் நிழல் வெளிக்காகவும் அங்கு செல்கின்றன. மாலை வேளையில் எங்கிருந்தாலும் சரணாலயத்துக்கு வந்துவிடுகின்றன. இதனால் பகல் வேளையில் வெறிச்சோடியது போன்று

காணப்படும் இந்தச் சரணாலயம், மாலையில் கண்களுக்கு இதமாக காட்சியளிக்கிறது.

iv. சீசன் காலத்தில் 100-க்கும் மேற்பட்ட வகையான நீர்ப்பறவைகளும் 37 வகையான நிலப்பறவைகளும் வந்து செல்கின்றன.

v. நீர்-நில வாழ் பறவைகள்: தற்போது இங்கு வந்துள்ள பறவையினங்களில் கூழைக்கிடா, வெள்ளை அரிவாள் மூக்கான், மிளிரும் அரிவாள் மூக்கான், சாம்பல் நிற கொக்கு, மைல் கால் கோழி, ஆலா, கரண்டி மூக்கான், நத்தை கொத்தி நாரை, பாம்பு நாரை, கொசு உல்லான், சிறிய கொக்கு, முக்குளிப்பான், வண்ண நாரை, மடையான், உண்ணி கொக்கு, நாமக்கோழி, சிறைவி, நீர்காகம் உள்ளிட்டவை நீர்வாழ் பறவைகளாகும்.

vi. வழக்கமான பறவைகளான ஆள்காட்டி குருவி, பருந்து, சிட்டு, வேதவால் குருவி, மஞ்சள் குருவி, மஞ்சு திருடி, மரங்கொத்தி பறவை, மைனா, புறா, மணியன் காக்கா, அண்டங்காக்கா, மயில், கல் குருவி, நாராயணபட்சி ஆகியவை நிலவாழ் பறவைகளாகும்.

vii. இப்பறவைகள் இங்கு தங்கியிருக்கும் காலங்களில் அவற்றுக்குப் போதுமான உணவு வகைகள் எப்போதும் கிடைக்கிறது என்பதே இப்பறவைகளின் வருகைக்கு முக்கியக் காரணம். பல ஆயிரம் கி.மீ. தொலைவில் இருந்தும் இங்கு வரும் பறவைகள், இங்கேயே தங்கி விடுவதும் உண்டு. அதிகபட்சமாக 1 லட்சம் பறவைகள் ஓராண்டில் வந்தது பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டிக்கான ஒளிபரப்பு உரிமத்தைப் பெற எந்தவொரு நிறுவனமும் விண்ணப்பிக்காத நிலையில், அதுதொடர்பான அறிக்கையை ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி நாகேஸ்வர ராவ் தலைமையிலான குழு உச்சநீதி மன்றத்திடம் சமர்ப்பிக்கவுள்ளது.

4. இந்திய தேசிய கால்பந்து அணியில் விளையாடுவதற்காக அண்மையில் ஆஸ்திரேலிய குடியுரிமையை துறந்து, இந்திய குடியுரிமை பெற்ற கால்பந்து வீரர்ரையான் வில்லியம்ஸ், இந்திய தேசிய முகாமில் இணைந்தார்.

5. எகிப்தில் நடைபெறும் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் அனிஷ் பன்வாலா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

   i. 25 மீட்டர் ரேப்பிட் ஃபயர் பிஸ்டல் ஆடவர் தனிநபர் பிரிவில் பங்கேற்ற அவர், இறுதிச்சுற்றில் 28 புள்ளிகளுடன் 2-ஆம் இடம் பிடித்தார். பிரான்ஸின் கிளமென்ட் பெசாகெட் தங்கமும் (31), உக்ரைனின் மேக்ஸிம் ஹோரோடினெட்ஸ் வெண்கலமும் (25) வென்றார்.

6. அருணாசல பிரதேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடிய மேகாலய வீரர் ஆகாஷ் சௌதரி, முதல்தர கிரிக்கெட்டில் அடுத்தடுத்து 8 பந்துகளில் சிக்ஸர்கள் விளாசிய முதல் வீரராக சாதனை படைத்தார்.

   i. அத்துடன் 11 பந்துகளில் அரைசதம் தொட்ட அவர், இந்த ஃபார்மட்டில் அதிவேக அரைசதம் அடித்தவராகவும் சாதனை படைத்தார். முதல்தர கிரிக்கெட்டில் இதற்கு முன், 2012-இல் இங்கிலாந்தின் வெய்ன் வைட் 12 பந்துகளில் அரைசதம் அடித்ததே சாதனையாக இருந்தது.

   ii. முதல்தர கிரிக்கெட்டில் 6 பந்துகளில் 6 சிக்ஸர்கள் அடித்த 3- ஆவது வீரர் ஆகாஷ் ஆவார். இதற்கு முன், மேற்கிந்தியத் தீவுகளின் சர் கார்ஃபீல்டு சோபர்ஸ் (1968), இந்தியாவின் ரவி சாஸ்திரி (1984-85) மட்டுமே அவ்வாறு சிக்ஸர்கள் விளாசியுள்ளனர்.

7. பாகிஸ்தான் ராணுவம், விமானப் படை மற்றும் கடற்படை ஆகிய மூன்று படைகளின் தலைவராக அசீம் முனீருக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

   i. இதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 27-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்த

மசோதா மீது நாடாளுமன்றத்தில் திங்கள்கிழமை (நவ.10) வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

ii. தற்போது ராணுவத் தலைமைத் தளபதியாக உள்ள அசீம்முனீரின் பதவிக்காலம் இந்த மாதத்துடன் நிறைவடையவுள்ளது. இதையடுத்து, அவரது பதவிக் காலத்தை நீட்டித்து கூடுதல் அதிகாரங்களை வழங்குவது, பாகிஸ்தான் உச்சநீதி மன்றத்தின் அதிகார வரம்பைக் குறைத்து புதிதாக கூட்டாட்சி அரசமைப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்துவது உள்பட பல்வேறு அம்சங்களைக் கொண்ட 27-ஆவது சட்டத் திருத்த மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

iii. பாகிஸ்தான் செனட்(மேலவை) மற்றும் தேசிய பேரவை (கீழவை) ஆகிய இரு அவைகளிலும் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு, அதிபர் ஒப்புதல் அளித்தவுடன் இச்சட்டத் திருத்தம் அமலுக்கு வரவுள்ளது.

iv. கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்படவுள்ள திருத்தத்தால் அதிபர், பிரதமரைவிட மிகுந்த அதிகாரமிக்கவராக அசீம் முனீர் உருவெடுப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

v. அதேபோல் தற்போது முப்படைகளையும் ஒருங்கிணைக்கும் தலைவராக உள்ள ஜெனரல் ஜாஹிர் ஷம்ஷத் மிர்ஸாவின் பதவிக் காலம் நவ. 27-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. அவருக்குப் பிறகு அந்தப் பதவி ரத்து செய்யப்படவுள்ளது.

vi. 27-ஆவது சட்டத் திருத்த மசோதா கூறுவது என்ன?

- பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதியாக இருப்பவரே முப்படைகளையும் உள்ளடக்கிய பாதுகாப்புப் படைகளின் தலைவராக இருப்பார்.
- பிரதமரின் அறிவுறுத்தலோடு ராணுவம், விமானப்படை, கடற்படை தலைமைத் தளபதிகளை அதிபர் நியமிப்பார். ஆனால், ராணுவ தலைமைத் தளபதி பொறுப்பை வகிப்பவர் அத்துடன் பாதுகாப்புப் படைகளின் தலைவர் பொறுப்பையும் சேர்த்து கவனித்துக் கொள்வார்.

8. சாலை விபத்துகளில் சிக்கி உயிரிழப்போரின் உடல் உறுப்புகள், திசுக்கள் மற்றும் எலும்புகள் தானமாக பெறப்படுவதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசுகளை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பின் இயக்குநர் அனில் குமார் மாநிலங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

i. உடல் உறுப்பு மாற்று சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் உறுப்புகளுக்கு இந்தியாவில் பற்றாக்குறை நிலவுகிறது. வெவ்வேறு உறுப்புகள் வேண்டி ஆயிரக்கணக்கான நோயாளிகள் காத்திருப்புப்பட்டியலில் உள்ளனர்.

ii. சாலை விபத்துகளால் ஏராளமானோர், குறிப்பாக இளைஞர்களும் ஆரோக்கியமானவர்களும் உயிரிழக்கின்றனர்.

iii. 2023-ஆண்டுக்கான மத்திய சாலை போக்குவரத்து அமைச்சக அறிக்கையில், 'அந்த ஆண்டில் சுமார் 1.7 லட்சம் பேர் சாலை விபத்துகளால் உயிரிழந்தனர்' என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களில் பலரிடம் இருந்து உடல் உறுப்புகளை தானமாகப் பெற்றிருக்கலாம்.

iv. ஆனால், அவர்களைப் பற்றி உரிய நேரத்தில் தெரியாததால், அவர்களிடம்

இருந்து தானமாக கிடைத்திருக்கக் கூடிய உறுப்புகள் கிடைக்காமல் போய்விட்டன.

v. மனித உறுப்புகள் மற்றும் திசுக் கள் சட்டம் 1994 மற்றும் அதன் விதிமுறைகளின் கீழுள்ள நடை முறைகளின்படி, மூளைச்சாவு அடைந்தோரின் உடல் உறுப்புகளைத் தானமாகப் பெறுவது குறித்துப் பரிசீலிக்க வேண்டும்.

9. இந்தியா- அங்கோலா இடையேயான இருதரப்பு கூட்டுறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், மீன்வளம், நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் வளங்கள் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

i. அங்கோலா நாட்டுக்கு 4 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

ii. வரும் செவ்வாய்க்கிழமை (நவ. 11) நடைபெறும் அங்கோலா நாட்டின் 50-ஆவது சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க, முதல் இந்திய குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு அந்நாட்டிற்கு சென்றுள்ளார். திங்கள்கிழமை அங்கோலா நாடாளு மன்றத்தில் அவர் உரையாற்ற உள்ளார்.

iii. முன்னதாக, அங்கோலா அதிபர் மாளிகையில் குடியரசுத் தலைவருக்கு அதிகாரபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது. 21 குண்டுகள் முழங்க ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

iv. இதனைத் தொடர்ந்து, அங்கோலா அதிபர் ஜோ மேனுவல் கோன்சால் வேஸ் லோரென்சோவும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவும் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையின் முடிவில் முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. மேலும், தலைவர்களின் சந்திப்பு குறித்து கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு குறிப்பிட்டிருப்பதாவது: இந்தியா-அங்கோலா இடையேயான நல்லுறவு, பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் இரு நாட்டு மக்களின் செழிப்புக்கான பொதுவான லட்சியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பில் அங்கோலா முக்கியப்பங்கு வகிக்கிறது. பெரும் பூனை இனங்களுக்கான சர்வதேச கூட்டமைப்பு (ஐபிசிஏ), சர்வதேச உயிரி எரிபொருள் கூட்டமைப்பு (ஜிபிஏ) ஆகியவற்றில் இணைய அங்கோலா எடுத்துள்ள முடிவை இந்தியா வரவேற்கிறது என்றார்.

v. பேச்சுவார்த்தையில் தொழில்நுட்பம், வேளாண்மை, சுகாதாரம், பாதுகாப்பு, உள்கட்டமைப்பு மற்றும் மக்கள்-மக்கள் தொடர்பு உள்பட புதியமற்றும் வளர்ந்து வரும் துறை வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேலும் விரிவுப்படுத்த இரு தலைவர்களும் ஒப்புதல் தெரிவித்தனர்.

vi. மீன்வளம், நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல் வளங்கள் மற்றும் தூதரக விவகாரங்கள் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. மேலும், இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் மற்றும் பரந்த இந்திய-ஆப்பிரிக்கா மன்ற உச்சிமாநாட்டின் கட்டமைப்பின்கீழ் தங்கள் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த தொடர்ந்து இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டன என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

vii. அங்கோலா பயணத்தை முடித்துக் கொண்டு, இரண்டாவது கட்டமாக போட்ஸ்வானாவுக்கு அவர் செல்லவுள்ளார். குடியரசுத் தலைவருடன் மத்திய ரயில்வே மற்றும் நீர்வளத் துறை இணை யமைச்சர் வி.சோமண்ணா, மக்களவை எம்.பி.க்கள் பிரபுபாய் வாசவா மற்றும் டி.கே.அருணா ஆகியோர் பயணக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.